
# திராவிடத்தால் வாழ்கிறோம்

871

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

68

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## இலக்கு கடவுள் அல்ல, சாதி!

கடவுள் மறுப்புக் கொள்கையுடன் மட்டும், பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கவில்லை. சாதி பேதங்கள் ஒழிப்புதான் அவரின் லட்சியமாக இருந்தது. அதற்குத் தடையாக இருந்த அனைத்தையும் எதிர்த்த போது, பின்னாளில் கடவுளும் அப்பட்டியலில் இணைந்தது. அதற்கு ஓர் உதாரணம்தான், 28.11.1927 அன்று நடைபெற்ற ‘திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை சங்க மாநாடு’. சிறுமிகள் சிலர் இணைந்து தெய்வ வணக்கப் பாடலைப் பாடித்தான், மாநாடு தொடங்கப் பட்டது. அப்போது கடவுள் மறுப்பு ‘கொள்கை’ உருவாகவில்லை.

புகை வண்டி நிலையத்தில் இருந்து தந்தை பெரியார், திருச்சி விஸ்வநாத பிள்ளை, பட்டுக்கோட்டை அழகிரி, மாயவரம் எஸ்.வி.லிங்கம் உள்ளிட்ட தலைவர்கள் மோட்டார் காரில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டனர். முன்னே யானை, மேள வாத்தியங்கள் முழங்க முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலம் மாநாட்டுப் பந்தலை அடைந்தது. மாநாட்டுக் கொட்டகை மக்கள் வெள்ளத்தில் நிறைந்திருந்தது. தொடக்கத்தில், புரோகிதக் கொடுமை, பார்ப்பனிய மாயை, சுயமரியாதையின் அவசியம் குறித்து வலியுறுத்தும் பாடல்கள் பாடப்பட்டன.

அப்போது எம்.எல்.சி.-யாக இருந்த டி.கே.சிதம்பரநாத முதலியார் மாநாட்டைத் திறந்துவைத்து பேசுகையில், “சுயமரியாதைச் சங்க ஆண்டு நிறைவு விழா மாநாட்டைத் திறந்து வைக்குமாறு எனக்கு கட்டளையிடுவது பொருத்தமற்றது. இந்த உணர்ச்சியை தமிழ் நாட்டில் ஆரம்பித்தவர் நாயக்கர் (பெரியார்) ஆவார். பார்ப்பனரல்லாதோர் இயக்கத்திற்குப்




புத்துணர்ச்சி அளித்த பெருமை அவரையே சாரும். ஆடாததை எல்லாம் ஆட்டிவைத்த பெருமை ‘குடிஅரசு’க்கே உண்டு. இதற்குக் காரணம் அப்பெரியாரின் செயலும் எழுத்தும்” என்று பெரியாரைப் பாராட்டிப் புகழ்ந்தார்.

பெரியார் பேசும்போது, “நான் எண்ண பேச வேண்டுமென்று நினைத்தேனோ அதுவே மறந்துபோகும் அளவுக்குப் பேசியவர்கள் எல்லாம் என்னை வெகுவாகப் பாராட்டி, வெட்கப்படச் செய்துவிட்டார்கள். குடிஅரசைப் பற்றி அதிகமாகக் கூறினார்கள். அதிலுள்ள வல்லினம், மெல்லினம் போன்ற இலக்கணப் பிழைகளும், மற்ற பிழைகளும் எனக்குத் தெரியும். இதற்காக நான் இலக்கணம் கற்கப்போவதில்லை. பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை, மேல் கீழ் இல்லை என்பதுதான் நம் கொள்கை. ‘கவரிமான் ஒரு மயிரிழப்பின் உயிர் வாழாது’ என்பது போல, மனிதனும் மானமிழந்து வாழ விரும்பான். மனிதத் தன்மையோடு இசைந்த வாழ்க்கையை வாழ வேண்டுமென்றால், சுயமரியாதைதான் வேண்டற்பாலது” என இயக்கத்தின் நோக்கங்களை விளக்கிப் பேசினார்.

* சூத்திரன் என்ற சொல்லை யாரும் எந்தச் சமயத்திலும் உபயோகப்படுத்தக்கூடாது.

* புகைவண்டி நிலையங்களில் உள்ள உணவுச்சாலைகளில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதோருக்கு தனித்தனி இடங்கள் என்ற வேற்றுமையை ஒழிக்க வேண்டும்.

* மனித சமூகத்திற்கே பொருத்தமற்ற வருணாசிரமத்தை ஆதாரமாகக் கொண்ட மனு சாஸ்திரம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

* இந்து கோயில், குளங்கள் அனைத்திலும் அனைத்து இந்துக்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும்.

* கோயிலில் கடவுளை வழிபட தரகர் தேவையில்லை.

* குடும்பச் சொத்தில் பெண்களுக்கும் சமபங்கு கொடுக்க வேண்டும்.

* நாட்டில் சாதி வேற்றுமை இருக்கும் வரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும்.

* தேவதாசி முறை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும்.

என்பன உள்ளிட்ட 31 தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

அக்காலகட்ட சாதியப் பாகுபாடுகள், அதற்கெதிராக கிளர்ந்தெழுந்த சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றைக் கண்முன் நிறுத்துகின்றன இத்தீர்மானங்கள்.

**...கூட்டம் திரளும்**

# தமிழ்ப் பண்பாட்டின் அறிவு வளாகம்!




தமிழ் அறிவுப் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கிறது, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம். தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்ல, இந்தியாவில் இருந்தும், உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொடர்ந்து அறிஞர்கள், ஆய்வாளர்கள், பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், நூலகத்தின் அனைத்துச் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து, ‘தமிழ் அறிவு வளாகம்’ ஒன்றை உருவாக்கும் பணி, அரசு உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது. ரூ.35 கோடி செலவில் 40,000 சதுர அடியில் உருவாகவுள்ள இந்த அறிவு வளாகத்தில் பிரமாண்டமான நூலகம், தமிழ் அச்சுப் பயன்பாட்டின் வரலாற்றை விவரிக்கும் வகையிலும், சிந்துவெளி ஆராய்ச்சிகளைப் புரிந்துகொள்ளும் வகையிலும் இரண்டு அருங்காட்சியகங்கள், ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய ஆவணக் காப்பகம் ஆகியவை உருவாக்கப்படவுள்ளன. இதற்காக தமிழ்நாடு அரசு 30 ஆயிரம் சதுர அடி பரப்பிலான நிலம் வழங்கியுள்ளது.

இந்த அறிவு வளாகம் பயன்பாட்டுக்கு வரும்போது, பண்பாட்டு சுற்றுலா மையமாக அமையும் என்றால் மிகையில்லை.


தற்போது நூலகத்திற்கு வருகை புரிவோர், நூலகத்தின் உடனான அவர்களுடைய நினைவை மேம்படுத்தும் விதமாக நூலகத்தில் புதிதாக செல்ஃபி பாயின்ட் (Selfie Point) பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் புகைப்படம் எடுத்துக் கொள்வதோடு, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தை டேக் (TAG) செய்து சமூக ஊடகப் பக்கங்களில் புகைப்படங்களைப் பதிவேற்றம் செய்யவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஃப்ளாஷ்பேக்



## அசைத்துப் பார்க்க முடியாத வெற்றியாளர்!



த.அரவிந்தன்

2000-ஆம் ஆண்டுவாக்கில் சென்னை, தியாகராய நகர், ஜி.ஆர்.டி. ஹோட்டலில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள முதலமைச்சராக இருந்த கலைஞர் வந்தபோது, எடுத்த படம். அவருடன் நெருக்கமாக நின்று கேள்வி கேட்கும் சூழலில் எடுக்கப்பட்டது. பத்திரிகையாளராக கலைஞருடன் எத்தனையோ நினைவுகள். எத்தனையோ அனுபவங்கள். அசாத்திய ஆளுமை அவர். அசைத்துப் பார்க்க முடியாத வெற்றியாளர். விமர்சனங்களை விரும்பிய தலைவர் கலைஞர்.

**– த.அரவிந்தன்,**
**மூத்த பத்திரிகையாளர்,**
**சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in


# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

68

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## மலைக்க வைக்கும் காலப் பெட்டகம்!




‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற சமூக நீதிக் கொள்கையை மையமாகக் கொண்டு செயல்படும் திராவிட மாடல் அரசு, நான்கு ஆண்டுகளை நிறைவுசெய்து ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. இந்த நான்காண்டில் கழக அரசு செய்துள்ள அரும்பணிகளை, மாபெரும் தொகுப்பாக வெளியிட்டுள்ளது தமிழரசு இதழ்.

720 பக்கங்களில், ‘நாடு போற்றும் 4 ஆண்டு தொடரட்டும், இது பல்லாண்டு’ என்ற இந்தச் சிறப்பு மலர், அனைத்துத் துறைகளிலும் கழக அரசு நிகழ்த்தி வரும் சாதனைத் திட்டங்களையும், அதனால் தமிழ்நாடு அடைந்துள்ள முன்னேற்றங்களையும் பட்டியலிட்டு, தரவுகளோடு பேசுகிறது.

அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கிய திட்டமிடலும், எவர் ஒருவரும் விடுபடாமல், அனைவரும் தங்களை அடுத்த நிலைக்கு மேம்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை வழங்குவதும்தான் மக்கள் நல அரசின் அடிப்படை. அதற்கேற்ப கல்வி-சுகாதாரம்-வேளாண்மை-மகளிர் நலன்-வேலைவாய்ப்பு-தொழில் வளர்ச்சி-மொழி வளம்-சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனப் பல்வேறு துறை வளர்ச்சியிலும் இந்திய ஒன்றியத்திலேயே முதன்மை மாநிலமாக மட்டுமின்றி, முதல் மாநிலமாகவும் திகழ்கிறது தமிழ்நாடு.

அந்த இலக்கை அடைவதற்காகத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகளை, பல்வேறு துறைகளைச் சார்ந்த ஆளுமைகள் தரவுகளோடு எழுதிய கட்டுரைகள் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக மொழி-மத-இன ரீதியாக சிறுபான்மை அடையாளங்களைக் குறிவைத்து தாக்கும் பாசிச பா.ஜ.க.வின் நெருக்கடிகளை தமிழ்நாடு அரசு எப்படி எதிர்கொள்கிறது என்பதையும், மாநில வளர்ச்சி என்பது வெறும் பொருளாதாரக் குறியீடுகளால் மட்டும் அளவிட முடியாதது என்றும் அதன் தனித்தன்மைகளும் கணக்கில் கொள்ளப்பட வேண்டியவை என்பதையும் இக்கட்டுரைகள் உணர்த்துகின்றன.

துறைவாரியாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் அனைத்தும் வரிசையாக பட்டியலிடப்பட்டிருக்கின்றன. அவற்றை வாசிக்கையில் ஏற்படும் வியப்பும் பெருமிதமும் இந்த ஆட்சிக்கான சான்றாக எண்ணத் தோன்றுகிறது.

2021 மே 7 அன்று தொடங்கிய சாதனை பயணம் எல்லா துறைகளிலும் தொய்வின்றி தொடர்ந்துகொண்டே இருக்கிறது. அனைவரையும் உள்ளடக்கி, எல்லா முயற்சிகளையும் இந்த அரசு எடுத்து வருகிறது.

சலிப்பு என்பதே துளியும் இன்றி, உழைப்பை மட்டுமே உறுதியாகக் கொண்டு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் இம்மலரில் எழுதியுள்ள வாழ்த்து வரிகள் சாட்சியமாகத் திகழ்கின்றன. “மலரின் ஒவ்வொரு பக்கத்தையும் புரட்டிய போது மலைத்துப் போனேன். இதுபோல் இன்னும் பல சாதனைகளைச் செய்ய வேண்டும் என்ற உற்சாகத்தையும், உறுதியையும் நான் அடைந்தேன். கழக அரசு என்ன செய்தது என்று கேட்பவர்களின் கண்களையும் வியப்படையச் செய்யும் மாபெரும் பெட்டகம் இது” என்று அவர் எழுதியுள்ள வாழ்த்து, கழக அரசு தமிழ்நாட்டு நலனில் கொண்டுள்ள கடமைக்குச் சான்று.

தமிழ்நாட்டின் கடந்த நான்காண்டு சாதனைகளை விளக்கும் காலப்பெட்டகமாகத் திகழும் இந்த நூல், தமிழிணைய மின்னூலகத்தில் இலவசமாக வாசிக்கக் கிடைக்கிறது.

**...வாசிப்போம்.**

# கருவூலம்

## அனைவருக்கும் தொடக்கக் கல்வி!

நீதிக்கட்சி ஆட்சி செய்த 16 ஆண்டுகளில், அனைத்து மக்களுக்குமான தொடக்கக் கல்விக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. வேலைவாய்ப்புக்காக அனைவருக்கும் பொதுவாகத் தேர்வுக்குழுக்கள் அமைக்கப்பட்டன. ‘இனாம் குடிகள் மசோதா’, ‘ஜில்லா போர்டு பிரிவினை மசோதா’, ‘வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை’ ஆகியவை நடைமுறைப்படுத்தப்பட்டன.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.